படிவம் : (இலக்கம் 01)

பாராளுமன்ற கூட்டத்தொடர் இலக்கம் : 79

நிறுவனத்தின் பெயர் : அமைச்சரவை அலுவலகம்

அரசாங்க கணக்குகள் குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள்	குறைபாடுகளை தவிர்ப்பதற்கு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலைமை
இடர் பதிவேடு	தற்போது இடர் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டு, இற்றைப்படுத்தி நடாத்திச் செல்லப்படுகின்றது
பொருட் கணக்கெடுப்பு பூர்த்தி செய்யப்பட்டு உரிய திகதியன்று அறிக்கைகள் கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்காமை	2022 ஆம் ஆண்டிற்குரிய பொருட் கணக்கெடுப்பினை நடாத்துவதற்கு 2022-12-05 ஆம் திகதியன்று முறையாக பொருட் கணக்கெடுப்பு குழுவானது நியமிக்கப்பட்டது. ஆயினும், 2021-12-31 ஆம் திகதி வரை குடியரசு கட்டிடத்தில் தாபிக்கப்பட்டிருந்த அமைச்சரவை அலுவலகமானது 2022-01-03 ஆம் திகதி தொடக்கம் லொயிட்ஸ் கட்டிடத்திற்கு கொண்டுச் செல்லப்பட்டது. அதன் போது அலுவலக செயற்பாடுகளையும் பிரிவுகள் ஒவ்வொன்றையும் மீண்டும் தாபிக்கும் போது பிரிவுகளுக்கான பொருட் கணக்கெடுப்பு பதிவேடானது மீண்டும் இற்றைப் படுத்த வேண்டி நேரிட்டது. அதற்கிணங்க, பொருட் கணக்கெடுப்பு பணிகளை முற்றாக்குவதற்கு தாமதமானதோடு, 2023-12-18 ஆம் திகதியன்றுக்கு உரிய அறிக்கைகள் கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.
பொருட் கணக்கெடுப்பின் போது தெரியவந்த மிகை, குறை தொடர்பில் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்தாமை	மேலதிகம் மற்றும் குறைபாடுகள் தொடர்பிலான சிபாரிசுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதோடு, 2022 ஆம் 2023 ஆம் ஆண்டுகளுக்கான அகற்றல் பணிகள் 2024-06-19 ஆம் திகதியன்றில் பூர்த்தி செய்யப் பட்டுள்ளன.
அனைத்து வாகனங்களிலும் அரச இலட்சினை பொறிக்கப்பட்டிருக்காமை	தற்போது அலுவலக சேர்மத்திலுள்ள அனைத்து வாகனங்களிலும் முன் பக்கம் தெளிவாக தெரியும் விதத்தில் அரச இலட்சினையுடன் நிறுவனத்தின் பெயர் மும்மொழிகளிலும் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டமானது மேற்கொள்ளப்பட்டிருக்காமை	அமைச்சரவையின் அலுவலகம் 2021-12-31 ஆம் திகதி வரை தாபிக்கப்பட்டிருந்த குடியரசுக் கட்டடத்தில் மட்டுபடுத்தப்பட்ட இடவசதியே காணப்பட்டது. ஆதலால் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவரை இணைத்துக் கொண்டதன் பின்னர் அவருக்கு போதுமான அலுவலக இடவசதியை வழங்குவதற்கும் அதேபோன்று கணக்காய்வு பணியாட்டொகுதிக்குத் தேவையான இடவசதியினை வழங்குவதற்கும் பிரச்சினை நிலவியது. தற்போது அமைச்சரவை அலுவலகம் கொழும்பு - 01, சேர் பாரோன் ஜயதிலக்க மாவத்தையில் அமைந்துள்ள "லொயிட்ஸ்" கட்டிடத்தில் தாபிக்கப்பட்டுள்ளதோடு, பதவி வெற்றிடமானது பதில் கடமை அடிப்படையில் நிரப்பப்பட்டு உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டமானது வருட ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்காமை	தற்போது உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் பதில் கடமையாற்றும் அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளதோடு, உரிய முறையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
மனிதவளங்கள் அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காமை	ஏற்கனவே அலுவலகத்தில் பயிற்சி பெறவேண்டிய உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் ஆகக்குறைந்தது 12 மணித்தியாலங்கள் கொண்ட வருடாந்த பயிற்சி வாய்ப்பு உறுதிப்படுத்தும் விதத்தில் மனிதவளங்கள் அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. 2023-01-27 ஆம் திகதியிடப்பட்டதும் 01/2023 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கை மற்றும் 2024-01-10 ஆம் திகதியிடப்பட்டதும் 01/2024 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை என்பவற்றின் மூலம் பயிற்சி வாய்ப்புகள் சேவை பிரமாணக்குறிப்பிலுள்ள தேவைகளை பூர்த்தி செய்வதற்காக மாத்திரம் வரையறுக்கப்பட்டுள்ளமையினால் பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

மொத்த பதவியணி அடங்கலாக செயலாற்றுகை உடன்படிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்காமை	இந்த அலுவலகத்தில் பதவி நிலைத்தர உத்தியோகத்தர்கள் அனைவரும் பஞ்சாங்க ஆண்டின் ஆரம்பத்தில் 07/98 மற்றும் 08/98 ஆகிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையிலுள்ள அறிவுறுத் தல்களின் பிரகாரம் குறித்த ஆண்டிற்குரிய பணிகள் தொடர்பில் செயலாற்றுகைத் திட்டமொன்றை முன்வைக்கின்றனர். இந்த செயலாற்றுகைத் திட்டத்தில் உத்தியோகத்தர்கள் உரிய ஆண்டில் பொறுப்பினை வகிக்கும் துறைகள், பூர்த்தி செய்ய வேண்டிய பணிகள் மற்றும் அதற்குரிய செயலாற்றுகை சுட்டெண்கள் என்பன உள்ளடக்கப் பட்டிருக்கும். இந்த செயலாற்றுகைத் திட்டம் சார்பில் உரிய பதவி நிலைத்தர உத்தியோகத்தர், மேற்பார்வை உத்தி யோகத்தர் மற்றும் அமைச்சரவைச் செயலாளர் அல்லது அவரால் அதிகாரம் கையளிக்கப்படும் சிரேட்ட உத்தியோகத்தர் ஒருவர் கைச்சாத்திடு வதோடு, வருடாந்தம் நிறைவேற்றவேண்டிய கடமை பொறுப்புகள் சம்பந்தமான ஒப்பந்தமொன்றாக செயற்படுகின்றது. அதேபோன்று இந்தத் திட்டத்திற் குரிய செயலாற்றுகை அரையாண்டு ரீதியிலும் வருடாந்த ரீதியிலும் மதிப்பீட்டிற்கு ஆட்படுகின்றது.. 2018-01-24 ஆம் திகதியிடப்பட்டதும் 02/2018 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையிலுள்ள 1 ஆம் பந்தியில் விதித்துரைக் கப்பட்டுள்ள வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தேவை 2023-11-30 ஆம் திகதியிடப்பட்டதும் 02/2018(I) ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை யிலுள்ள 3 ஆம் பந்தியின் மூலம் திருத்தப் பட்டுள்ளதோடு, இந்த திருத்தத்திற்கு அமைவாக செயலாற்றுகை ஒப்பந்தத்தை தயாரித்தலானது தேவையற்றதென அவதானிக்கின்றேன்.
இனங்காணப்பட்ட நிலை பேறுடைய குறியிலக்கு நோக்கங்களை அடைவதற்காக செயலாற்றுகை குறியிலக்குகள் நிர்ணயிக்கப்பட்டிருக்காமை இனங்காணப்பட்ட நிலை பேறுடைய அபிவிருத்தி	அமைச்சரவை அலுவலகத்திற்கு கையளிக்கப் பட்டுள்ள பணிகளை கவனத்திற்கொள்ளும் போது நிலைபேறுடைய அபிவிருத்தி நோக்கங்களை இந்த அலுவலகத்தின் பணிகளுடன் நேரடியாக தொடர்புபடுத்த முடியாது. அரசாங்க பணிகளை நிர்வகிப்பதற்கும் நெறிப்படுத்துவதற்குமான சகல கொள்கைத் தீர்மானங்களை எடுப்பதற்குத்

நோக்கங்களை நடைமுறைப் படுத்தும் முன்னேற்றம் பற்றி அளவிடுவதற்கு சுட்டெண்கள் நிர்ணயிக்கப்பட்டிருக்காமை	தேவையான ஒத்தாசையினை வழங்குவது இந்த அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதேபோன்று அமைச்சுக்களினால் கொள்கை அங்கீகாரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவை விஞ்ஞாபனங்களை சமர்ப்பிக்கும் போது அவற்றின் உள்ளடக்கங்கள் நிலைபேறுடைய அபிவிருத்தி நோக்கங்களுடன் இணங்குகின்றனவா என்பது சம்பந்தமாக பரிசீலனை செய்தல் அது சம்பந்தமாக தேவையான சந்தர்ப்பங்களில் தெளிவு படுத்தல்களை வழங்குதல் இந்த அலுவலகத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
உச்ச சேவைக் காலத்தை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்கள் முறையான விதத்தில் இடமாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை	இந்த அலுவலகம் வழமையான வருடாந்த இடமாற்றம் நடைமுறைப்படுத்தப்படாத அலுவலக மொன்றாகும். அதேபோன்று இந்த அலுவலகத்தின் கடமைகளின் தன்மைக்கேற்ப வழமையான கடமை நேரங்களின் பின்னரும் வார இறுதி நாட்களிலும் அரசாங்க விடுமுறை தினங்களிலும் கடமைகளை செய்யக்கூடிய உத்தியோகத்தர்களை முக்கியமாக இனங்கண்டு அவர்கள் சம்பந்தமான பாதுகாப்பு தடையகற்றல் அறிக்கையும் மீளாய்வு செய்யப்பட்டதன் பின்னர், இந்த அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இத்தகைய உத்தியோகத்தர்களை இனங்காண்பது கடினமான பணி ஒன்றாவதோடு, இவ்வாறு இனங்காணப்பட்ட உத்தியோகத்தர்கள் நீண்டகாலம் இந்த அலுவலகத்தில் சேவையாற்றுகின்றனர். இவ்வாறு நீண்டகாலம் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் நிறுவன ரீதியிலான அறிவினைக் கொண்டுள்ளமையினால் அமைச்சரவை அலுவலக கடமைகள் சம்பந்தமாக அனுபவம் கொண்ட வினைத்திறன்மிக்க உத்தியோகத்தர்களை அடிக்கடி இடமாற்றம் செய்வது இந்த அலுவலகத்தின் செயலாற்றுகை சம்பந்தமாக பிரதிகூலமான தாக்கத்தை ஏற்படுத்தும். ஆயினும் உத்தியோகத்தர்களின் கோரிக்கை மற்றும் பிற மனிதநேய விடயங்களின் நிமித்தம் தேவையான உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஒப்பம்./ டபிள்யு.எம்.டி.ஜே.பெர்னாண்டோ,
அமைச்சரவைச் செயலாளர்.

2024/08/14

W. M. D. J. FERNANDO
Secretary to the Cabinet of Ministers
Office of the Cabinet of Ministers
Lloyd's Building
Sir Baron Jayathilaka Mawatha
Colombo 01.